# மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு சர்ச்சை: யார் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது த.வெ.க. அரசு?

திராவிட அரசியல் இயக்கம் என்பது ஒருபோதும் ஆன்மீகத்திற்கு எதிரானதல்ல. திராவிடக் கொள்கையின் முதல் அரசியல் இயக்கமான நீதிக்கட்சி எனப்படும் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டதே ஒரு குடமுழுக்கு விவகாரத்தால்தான் என்பது மறைக்க முடியாத வரலாறு. தென்கயிலை எனப்படும் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் 115 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணி நடைபெற்றது. சென்னையின் பெரும் செல்வந்தரும், பொதுநல செயற்பாட்டாளரும், காங்கிரஸ் கட்சியில் மாநகராட்சி உறுப்பினராகவும் இருந்த பிட்டி. தியாகராயர் அவர்கள், ஒரு பவுன் 5 ரூபாய் விற்ற காலத்திலேயே மயிலாப்பூர் கோயில் குடமுழுக்கிற்காக 10 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். கோயில் அர்ச்சர்களும் நிர்வாகத்தினரும் தியாகராயரின் ஆன்மிக உள்ளத்தைப் பாராட்டி, இன்றைக்கு கோடிகளில் மதிப்பு பெறும் அந்த நன்கொடையைப் பெற்றுச் சென்றனர்.

**திருப்பணி நிறைவுபெற்று, குடமுழுக்கு நடைபெறும் நாளில் தியாகராயர் அவர்கள் மயிலாப்பூர் திருக்கோயிலுக்குச் சென்றார். அர்ச்சகர்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் கோபுரத்தின் மீது ஏறி நின்றிருந்தனர். அதிகளவில் நன்கொடை கொடுத்த பக்திமானாகிய தியாகராயரும் கோபுரத்தின் மீது ஏறிட விருப்பப்பட்டு அதை நோக்கிச் சென்றார். அப்போது சென்னை மாநகராட்சியில் அவருக்கு குமாஸ்தாவாக இருந்த பிராமணர் ஒருவர் அவரைத் தடுத்தார். “உங்கள் சாதிக்கு இதற்கு மேல் அனுமதி யில்லை. கோபுரத்திற்குச் செல்லும் தகுதியும் உரிமையும் ஆகம நெறிப்படி பிராமணர்கள் உள்ளிட்ட உயர் சாதியினருக்கே உரியது” என்று தியாகராயரை அனுமதிக்க மறுத்துவிட்டார்.**

பிட்டி. தியாகராயர் தனது காரைத் திருப்பச் சொல்லி, டி.எம்.நாயர் வீட்டுக்கு விடச் சொன்னார். தியாகராயரும் நாயரும் பிறகு நடேசனாரை சந்தித்தார்கள். ஏற்கனவே திராவிடர் சங்கம் - திராவிட மாணவர் விடுதி ஆகியவற்றை நடத்தி வந்த நடசேனார் - பிட்டி.தியாகராயர் - டி.எம்.நாயர் ஆகியோர் இணைந்தனர். நீதிக்கட்சி உருவானது. பிரிட்டிஷார் ஆட்சியில் இரட்டையாட்சி முறையிலான சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி வென்றது. 1925ஆம் ஆண்டு பனகல் அரசர் தலைமையிலான நீதிக்கட்சி ஆட்சியில், அறநிலையத்துறைச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ளவர்களால், ஆகம விதிகளுக்குட்பட்டு கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டத்தின் விதிகளை சங்கராச்சாரியார் உள்ளிட்ட ஆன்மீகப் பெரியவர்களுக்கு அனுப்பி, அவர்களின் சம்மதத்தையும் பெற்ற பிறகே, சென்னை மாநிலத்தில் உள்ள திருக்கோயில்களைப் பாதுகாக்கும் அறநிலையச் சட்டம் நிறை வேற்றப்பட்டது. அதுபோலவே, திருமுருக கிருபானந்த வாரியார் உள்ளிட்ட ஆன்மீக அன்பர்கள் பயன்படுத்திய குடமுழுக்கு என்ற சொல்லை, கும்பாபிஷேகம், சம்ப்ரோட்சணம் போன்ற சொற்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழகம். தமிழ்நாட்டில் எந்த ஆட்சி மாறினாலும் குடமுழுக்கு - நன்னீராட்டுப் பெருவிழா என்ற சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன.

**கடவுள் மறுப்பாளரான தந்தை பெரியார்தான் கோயில் கருவறைக்குள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற உரிமைக்குரலை எழுப்பியவர். அதனை சட்டமாக்கியவர் முத்த மிழறிஞர் கலைஞர். அதன்படி, அனைத்து சாதியினரையும் அர்ச்சக ராக்கும் பணி ஆணைகளை வழங்கியவர் திராவிட நாயகர் நம் கழகத்தலைவர் அவர்கள். ஒன்றே குலம் - ஒருவனே தேவன் என்ற திருமூலரின் வரிகளை முன்மொழிந்தவர் பேரறிஞர் அண்ணா. அதையே, ‘கோயில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாகி விடக்கூடாது” என்று வழிமொழிந்தவர் கலைஞர். இதுதான் திராவிட இயக்க ஆட்சியின் நிலைப்பாடு.**

ஒரு திருக்கோயிலுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடைபெறுவது வழக்கமாகும். மதுரை மீனாட்சி - சுந்தரேசு வரர் கோயிலுக்கு 2009ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. அப்போது, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றது. அதன்படி, 2021ஆம் ஆண்டு குடமுழுக்கு நடை பெற்றிருக்க வேண்டும். ஆனால், 2018ஆம் ஆண்டு ஏற்பட்ட எதிர்பாராத தீ விபத்தின் காரணமாக கோயிலுக்குச் சொந்தமான வீரவசந்தராயர் மண்டபம் முழுமையாக சேதமடைந்தது.

புகழ் பெற்ற மதுரைத் திருக்கோயில் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டது. பின்னர் சமணர்கள் காலத்திலும் அதன் பெருமை நிலைத்திருந்தது. பல படையெடுப்புகளை எதிர்கொண்டு, திருமலை நாயக்கர் காலத்தில், சைவத்துடன் வைணவமும், தமிழ் மண்ணுக்கேயுரிய சமய நல்லிணக்கத்துடன் ஒன்றாகக் கலந்தது. கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் விழாவையும், அதனைத் தொடர்ந்து மீனாட்சியம்மன் திருக் கல்யாணமும் நடைபெறும் விழாவையும் கொண்டாடுவது இன்றுவரை வழக்கமாக உள்ளது.

வீரவசந்தராயர் மண்டபத்தைப் பழமை மாறாமல் புதுப்பித்த பிறகு, மதுரை திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்துவதென திராவிட மாடல் ஆட்சியில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கானப் பணிகள் நடைபெறத் தொடங்கின.

**மதுரை திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராக ருக்மணி பி.டி.ஆர்.பழனிவேல்ராசன் அவர்களும், அவருடன் அறங்காவலர் உறுப்பினர்க ளும் திராவிட மாடல் ஆட்சியில் நியமிக்கப் பட்டனர். மீனாட்சி அம்மனை முதன்மை யாகக் கொண்ட திருக்கோயிலுக்கு அறங்காவலர் குழுத் தலைவராக ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டது வரலாற்றுச் சாதனையாகும். அதுவும், தன் துணை வரை இழந்தவர் அவர். அதுபோலவே, அறங்காவலர் உறுப்பினர்களில் ஒருவராக மீனா அன்புநிதி என்ற பெண்மணியும் நியமிக்கப்பட்டார். அறங்காவலர் குழு வரலாற்றில் இத்தகைய இரண்டு பெண்களை மிக முக்கியமான திரு க்கோயிலில் நியமித்தது திராவிட மாடல் அரசு.**



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

மதுரை மீனாட்சியம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்காக திருக்கோயில் நிதியாக 15 கோடியே 81 இலட்சம் ரூபாயை திராவிட மாடல் அரசின் அறநிலையத்துறை ஒதுக்கியது. உபயதாரர் நிதி 16 கோடியே 47 இலட்சம் ரூபாய் நிதியும் சேர்த்து, 32 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில், 186 திருப்பணிகளைத் திருக்கோயிலில் மேற்கொள்வது எனவும், 2026 மார்ச் மாதத்திற்குள் குடமுழுக்கு நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீ விபத்தால் சிதிலமடைந்த வீரவசந்தராயர் மண்டபத்தை பழம்பெருமையுடன் புதுப்பிப்பதற்காக 35 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாமக்கல் அருகிலிருந்து, அதே வகையிலான கல் மிகுந்த சிரத்தையுடன் வெட்டி எடுக்கப்பட்டு, பாதுகாப்புடன் மதுரைக்குக் கொண்டு வரும் பணியை திராவிட மாடல் அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள் மேற்கொண்டார். தலைமைச் சிற்பி வேல்முருகன் முன்னெ டுப்பில், பழமை மாறாத சிற்பங்க ளுடனான மண்டபத் தூண்களின் பணிகள் விரைவாக நடைபெற்றன. ஒவ்வொன்றும் 16 அடி உயரத்திலான, 73 கல் தூண்களுடன், உரிய நேரத்தில் மண்டபத்தை முடித்து, குடமுழுக்கு நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் 2026ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே திராவிட மாடல் அரசினால் நிறை வேற்றப் பட்டன.**

கடந்த 7-3-2026 அன்று திராவிட மாடல் அரசின் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்ற மதுரைக் கோயில் திருப்பணி சீராய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற பட்டர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், திருப்பணிகள் விரைந்து நடந்து முடிந்துள்ள நிலையில், திருக்கோயிலின் வழக்கமான சித்திரைத் திருவிழா மற்றும் இதர நிகழ்வுகளை நிறைவு செய்தபிறகு, பராபவ ஆண்டு ஆவணித் திங்கள் 31ஆம் நாள் (17-9-2026) அன்று குடமுழுக்கு விழாவை நடத்தலாம் எனத் தெரிவித்த நிலையில், ஆகம விதிகளை மதித்து திராவிட மாடல் அரசின் அறநிலையத் துறை, அந்தத் தேதியில் குடமுழுக்கு நடத்த அனுமதி வழங்கியது.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் அறங்காவலர் உறுப்பினர் ஆகிய இரண்டு பெண்மணி களையும் புறக்கணிக்கும் வகையில், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் அனைவரையும் புறந்தள்ளி, ஆகம விதிகளுக்கு முரணாகவும், அறநிலையத் துறை மரபுக்கு மாறாகவும், எங்கிருந்தோ வந்த உத்தரவுக்கு அடிபணிந்த அடிமையாக செயல்பட்டு வருகிறது ஜோசப் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு.

மதுரை திருக்கோயில் குடமுழுக்கு விழா அழைப்பிதழில் அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் 5 உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. காரணம், ஒரு பெண்மணி தலைவராக இருக்கிறார். மற்றொரு பெண்மணி உறுப்பினராக இருக்கிறார். அவர்களை முன்னிறுத்துவதா என்கிற ஆணாதிக்க உணர்வே முதன்மையானதாகும்.

**சிவபெருமானே தன் உடம்பில் பாதியை, பெண்ணான உமையம் மைக்குக் கொடுத்தவர். ஜோசப் விஜய் ஆட்சியில், மதுரைத் திருக்கோயில் அறங்காவலர் குழுவில் உள்ள இரண்டு பெண்மணிகளை முற்றிலுமாக ஒதுக்கிவிட்டு, அழைப்பிதழில் ஆர்.எஸ்.எஸ். வளர்ப்பான அமைச்சர் நிர்மல் குமாருக்கு முக்கியத்துவம் தந்திருக் கிறார்கள். அவரையடுத்து, மதுரை மாவட்டத்திற்குட்பட்ட காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் பெயர் அச்சிடப் பட்டுள்ளது. த.வெ.க.வின் அறநிலையத் துறை அமைச்சர் ‘முறுக்கு பாக்கெட்’ ரமேஷ் பெயரைப் போனால் போகிற தென்று அதற்குப்பிறகு அச்சிட்டுள்ளார்கள்.**

அறங்காவலர்களைப் புறக்கணிப்பது குறித்து உயர்நீதிமன்றமே கண்டனம் தெரிவித்தும் விஜய்யின் த.வெ.க. அரசு நேர்மையாகச் செயல்படவில்லை. அறங்காவலர் குழுவில் உள்ளவர்களை மட்டுமல்ல, பக்திப் பாசுரங்கள் நிறைந்த தமிழையும் த.வெ.க. அரசு முற்றிலுமாக ஓரங்கட்டியுள்ளது.

**திராவிட மாடல் ஆட்சியில், ஆகம விதிகள் படியான வடமொழி மந்திரங்களுடன், தேவாரம் - திருவாசகம் உள்ளிட்ட தமிழ் மந்திரங்களையும் பாடக் கூடிய ஓதுவார்களுக்குயாக சாலையிலும், கோபுரத்திலும், கருவறையிலும் உரிய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஜோசப் விஜய் ஆட்சியில் தமிழ் ஓதுவார்களுக்கு அனுமதி அளிக்கவில்லை என்பதால், அவர்கள் அறநிலையத்துறை அலுவலகத் திலேயே முற்றுகைப் போராட்டம் நடத்தும் அவல நிலை ஏற்பட்டது.**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் அமைந்துள்ள மீனாட்சி யம்மன் கோயில் திருக்குடமுழுக்கில் தமிழுக்கு உரிய இடம் தரவேண்டும் என்று போராடிய தமிழ்நெறிப் பக்தர்களைத் தீவிரவாதிகள் போல இழுத்துச் சென்று கைது செய்தது த.வெ.க. அரசு.

**திராவிட மாடல் ஆட்சியில் 4000 திருக்கோயில்களுக்கு மேல் சிறப்பான முறையில் குடமுழுக்குப் பெருவிழாக்கள் நடைபெற்றன. அதே திராவிட மாடல் ஆட்சியில் திருப்பணிகள் நிறைவுபெற்ற, புகழ்மிக்க மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்கை நடத்துவதில், ஜோசப் விஜய்யின் த.வெ.க. அரசு இத்தனை தகிடுதத்தங்களை செய்வது யாரைத் திருப்திப்படுத்துவதற்காக?**

## நாமக்கல்லில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

### சிலைக்கு ராஜேஸ்குமார் எம்.பி. – முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் மாலை அணிவித்து மரியாதை!

நாமக்கல், செப். 18 -

தமிழ் சமூகத்திற்கு தனது அரசியல் சிந்தனைகள் மூலம் அறிவொளி ஏற்றிய தென்னாட்டு பெர்னாட்ஷா என போற்றப்படும் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல்லில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான ராஜேஸ்குமார், முன்னாள் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், மாவட்ட அவைத்தலைவர் சி. மணிமாறன், மாநகராட்சி மேயர் து. கலாநிதி, நகரக் கழகச் செயலாளர்கள் செ.பூபதி (துணை மேயர்), ராணா ஆனந்த், சிவக் குமார், ஒன்றியச் செயலாளர் பழனிவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் கூடமலை ஊராட்சியில் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏவு.மான கு.சின்னதுரை மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தம்மம்பட்டி வி. பி. ராஜா, மாவட்டப் பிரதிநிதி பொன் தங்கராஜ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இடைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு

## தமிழ்நாடு அனைத்து கட்டிட - உடல் உழைப்புத் தொழிலாளர் சங்கங்கள் ஆதரவு!

### பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் அறிக்கை!

சென்னை, செப். 18 -

தமிழ்நாடு அனைத்து கட்டிட மற்றும் உடல் - உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ஏ.டிமோகன் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில பொது செயலாளர் ஏ.டி.மோகன் தலைமையில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மற்றும் உறுப்பினர்கள், கலந்து ஆலோசித்து தற்போது நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற இடைத்தேர்வில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்களது கூட்டமைப்பு சங்கம் முழு ஆதரவை தருகிறது. கழக வெற்றிக்காக எங்களது தொழிலாளர்கள் அயராது பாடுபடுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மீஞ்சூர் க. சுந்தரம்
### செப்டம்பர் 18 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.

மீஞ்சூர் ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்ததோடு, கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் – மாநில ஆதிதிதிராவிடர் நலக்குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1989,1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும் – பால்வளத் துறை அமைச்சராகவும் இருந்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2023ஆம் ஆண்டுவேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்,“அண்ணா விருது” வழங்கி சிறப்பித்ததுடன், “கழகப் பணியிலும், மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட இவரது மறைவு பேரிழப்பாகும்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**